விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

இனி ஒ இதழ்

அழகிய ஆரம்பம்...

indhrumail@gmail.com
70940 53241
மாதமிருமுறை இதழ்
1-15 ஜீன் 2025
16-ம் இதழ்

தேநீர் வரம்!

எப்படியும்
அவளுடன்
நாளை தேநீர் பருகுதல்
சாக்கில் அதுவும் நிகழும்...

எப்படி அவ்வளவு
உறுதியென நீங்கள் கேட்டால்
அதற்கும் பதிலுண்டு...

ஆறு வருட
அயலக வாழ்விலிருந்து
இல்லம் வந்தாகிவிட்டது
அவளுடன்
முதல் துயில் கலைந்து
எழுகையில்
சொக்கத்தங்கப் பேரழகோடு
அவள் அப்படித்தான்
இருப்பாள்
இனிக்கும் தேநீர்க் கோப்பையோடு
கோவைக்கனியிதழும்
வசமாகுதல் நிதர்சனம் தானே!?



-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

அனைவருக்கும் வணக்கம். கோடைக்காலம் போனதே தெரியாமல் மழை வந்து கரண்ட் பில்லை மிச்சம் செய்துவிட்டது... கிட்டத்தட்ட அனைத்து மாவட்டங்களிலும் ஓரளவ மழை என்ற செய்தியை பார்க்க நேர்ந்தது.

இந்த இதழில் சில புதிய எழுத்தாளர்கள் நம்முடன் இணைந்துள்ளனர். அவர்களுக்கு வாழ்த்துக்கள்

20 பக்கங்களாக இதழை மாற்றியிருக்கிறோம்.

எழுத்தாளர்கள் நீங்கள் நடத்தும் வாட்சப் குழுக்களில் இன்று எண்ணையும் இணையுங்கள்.

நன்றி...

ஆசிரியர்


இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ✍வெ.கோபிநாத்



இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp



மினிகதை:
மதநல்லிணக்கம்

மலர்மதி

இஸ்மாயில் பாய்வீட்டில் நாளை பக்ரீத் விருந்து. அரிசி மண்டி ஓனர் பிரான்ஸிஸ் பிரியாணி அரிசி மூட்டையைக் கொடுத்து அனுப்பினார். ஆட்டோவில் மூட்டையைக் கொண்டு வந்து இறக்கினார் கிருஷ்ணசாமி






பரிசு -

கே.அசோகன்
சென்னை

”அன்பே !
மரபுகளுக்கு
உட்பட்டு
கவிதை எழுதினேன் !”
உன் செவ்விதழ்களில்!”

”பத்து திங்களில்
பரிசளித்தாய்
அழகான
ஹைக்கூ கவிதையாய் !



வர வர நம்ம பையன் உன்ன மாதிரியே
ஆயிட்டு வரான்டி....

என்னங்க சொல்றீங்க?

அட ஆமான்டி... பேச்சுப் போட்டியில் முதல் பரிசு வாங்கி இருக்கான்டி !

எம் அசோக் ராஜா
அரவக்குறிச்சி பட்டி

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp



அல்வா கதைகள்

முத்து ஆனந்த் வேலூர்
செல் : 7010482479

தன் மனைவிக்கு "சுகர்" என்று டாக்டர் சொல்லிவிட்டதால் அவளுக்குத் தெரியாமல் அடிக்கடி "அல்வா" சாப்பிட்டான் சுந்தர மூர்த்தி!

மனைவி "மூடை" "மாற்றி விட்டதால் "கோபத்தில்" தான் வாங்கி வந்த "அல்வா"வைப் பிச்சைக்காரனுக்குப் போட்டான் ருத்ரேஷ்!

தன் கணவனை "சமாதானப்படுத்த" எப்பொழுதும் "அல்வா" கொடுப்பதையே "முதல் ஆயுதமாக"ப் பயன்படுத்தினாள் சுந்தரி!

தன் பிறந்த நாளுக்காக வீட்டில் உள்ள அனைவருக்கும் "அல்வா" கொடுத்து விட்டுத் தான் மட்டும் தனக்குப் பிடித்த "பக்கோடா" சாப்பிட்டான் அரவிந்தன்!

லதா "பிரேக் அப்" பண்ணப் போவதைத் தெரிந்து கொண்ட சரத் அவளை முந்திக் கொண்டு அவளுக்கு "அல்வா" கொடுத்தான்!

அடுத்த இதழில் மெக்கானிக் கதைகள்

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp



யாரிடமும் பேசிடா மௌனம்..

நீயில்லா நொடிகளனைத்தும்
மொட்டவிழ்த்த மலரின் அழகோ
மழலையின் மெல்லிய புன்னகையோ
இரசனையின் எட்டா பிடிக்குள்
சிக்கியே மரணிக்கின்றது...

யாரிடமும் பேசிடா நின் மௌனம் கூட
என்னோடு முட்டி மோதுகிறது..
உந்தன் நினைவொன்றையே
ஆடையெனச் சுற்றிக் கொள்ளும்
மனம் ஏனோ வெட்கம் மறக்கிறது...

காற்றோடு கரையும் வாசமதில்
நின் வாசமும் கலந்தே வருகிறது...
நின் வாசமதை சுவாசமென ஏற்று
சப்தநாடிகளும் சப்திக்குமாறு
உயிரின் ஆழம்வரை
இழுத்துக் கொள்கிறேன்..

தன்னிலை மறந்திட்ட என்நிலைக் கண்டு
பரிகசித்து சிரிக்கிறது இந்த காதல்..
காதலில் வீழ்ந்தப்பின்
யாவரின் நிலையும் இதுதானே..
பின் ஏன் என்னை மட்டும்
எள்ளி நகையாடுகிறது
இந்த பொல்லாத காதல்...




சசிகலா திருமால்
கீழப்பழுவூர்


அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

வலையில் மாட்டியது...







அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

கவருக்குள்ளிருந்து நறுமணத்தை
பீறிட்டு வீசியது.
கட்டாத உதிரி மல்லி..

நம்.திரு.ரஅம்ஏச்



பைக்களை
இப்படியும்
ஏற்றிக்கொண்டு
போகலாம்...

புதிய
பார்வை...

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக் கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ் Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...


இன்று இதழை உங்கள்
நண்பருக்கும் அறிமுகப்படுத்துங்கள்

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

நில அளவுகள் அறிவோம் நில அள...

1 ஹெக்டேர் -2 ஏக்கர் 47 சென்ட்
1 ஹெக்டேர் - 10,000 சதுர மீட்டர்
1 ஏக்கர் - 0.405 ஹெக்டேர்
1 ஏக்கர் - 4046.82 சதுர மீட்டர்
1 ஏக்கர் - 43,560 சதுர அடிகள்
1 ஏக்கர் - 100 சென்ட்
1 சென்ட் - 435.6 சதுர அடிகள்
1 சென்ட் - 40.5 சதுர மீட்டர்
1 கிரவுண்ட் - 222.96 சதுர மீட்டர்
1 கிரவுண்ட் - 2400 சதுர அடிகள்
1 மீட்டர் - 3.281 அடி
1 குழி - 44 சென்ட்
1 மா - 100 குழி
1 காணி - 132 சென்ட் (3 குழி)
1 காணி -1.32 ஏக்கர்
1 காணி - 57,499 சதுர அடி
1 டிசிமல் - 1 1/2 சென்ட்
1 அடி - 12 இன்ச் (30.38 செ.மீ)
1 மைல் - 1.61 கிலோ மீட்டர் (1610 மீட்டர்)
1 மைல் - 5280 அடி (8 பர்லாங்கு)
1 கிலோ மீட்டர் - 1000 மீட்டர் (0.62 மைல்)
1 கிலோ மீட்டர் - 3280 அடி
1 கிலோ மீட்டர் - 5 பர்லாங்கு 1.61 கிலோ மீட்டர் - 1 மைல்
1 பர்லாங்கு - 660 அடி (220 கெஜம்)
1 செயின் - 66 அடி (100 லிங்க்)
1 லிங்க் - 0.66 அடி
1 கெஜம் -3 அடி
8 பர்லாங்கு -1 மைல் (201.16 மீட்டர்)
1 ஏர்ஸ் - 1076 சதுர அடி (2.47 சென்ட்)
22 கெஜம் - 1 செயின் (66 அடி)
10 செயின் - 1 பர்லாங்கு
1 இன்ச் - 2.54 செ.மீ
1 செ.மீ - 0.3937 செ.மீ
1 கெஜம் - 0.9144 மீட்டர்
1 மீட்டர் - 1.093613 கெஜம் (3.28 அடி)










முடிந்தளவு பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்போம்



அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

நவ நாகரிகம்





எங்க ஆபீஸ்ல சத்தமே இருக்காதுடா

எப்படிடா?

எல்லோரும் தூங்கறதுல ஒத்துமையா இருப்போம்டா



எப்படி உம்புருஷனுக்கு குடல் வாய் வழியா வந்துதுடி?

அதிர்ந்துத் தும்மினார்டி



எதுக்கு டாக்டர் ஊரேத் திரண்டு உங்க க்ளினிக்க மூடச் சொல்றாங்க?

ஊரோட மக்கள் தொகை வெகுவாக் குறைஞ்சிப் போச்சாம்.

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம், பேசி -9600886441.

முகவர்கள் தேவை

- நீங்கள் LIC, Post Office முகவரா?
- தாலுக்காவிற்கு ஒருவருக்கு மட்டுமே முகவர் வாய்ப்பு...
- பகுதி நேரமாக வேறு வேலை தேடுபவரா?
- ஊரில் அதிகம் நண்பர்களை கொண்டுள்ளீர்களா?
- உங்கள் விபரங்களை 7094053241 என்ற எண்ணுக்கு உங்கள் சுய விபரங்களை அனுப்புங்கள்...



இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp



கவிதைகள்

எல்லா உண்மையான காதலும்
புன்னகையில் ஆரம்பித்து
கண்ணீரில் தான்
முடிகின்றன!

லி.நௌஷாத் கான்-
கும்பகோணம்

நண்பனொருவன்
அவன் காதலியின்
குணம் தெரிய வேண்டுமென்றான்...
பணம் இல்லாமல் இருந்து பார்
உன் ஒட்டு மொத்த சுற்றத்தாரின்
குணமே தெரியுமென்றேன்!

குளிர்ந்த மழைக்காலத்தில்
நீயில்லாமல் குடிக்கும்
தேநீர் பயனற்றது!

நீ அள்ளி முடிந்த
கூந்தலை கண்டவுடன்
பழக்க தோஷத்தில்
சிரித்து தொலைத்து விட்டேன்
செல்ல கோபம் கொண்டு
நீ மிரட்டுதலிலும்
ஓர் காதல்
ஒளிந்து கொண்டு தான் இருக்கிறது!

-சீறும் அலைகளை விட ஆபத்தானது-எனை
சிதைக்கும் உன் நினைவுகள்.
சுனாமி வந்தால் கூட
ஒருவேளை தப்பி விடலாம் போலிருக்கிறது
எனை இழுக்கும்
உன் சுழலில் இருந்து தப்பிப்பது அரிது!

அழகிய ஆரம்பம்...
இன்று எ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

Police Service - 112,100
Fire Service - 101
Ambulance Service - 102
Traffic Police - 103
Disaster Management - 108
Child Line - 1098
Railway Inquiry - 139
Anti-Corruption - 1031
Rail Accident - 1072
Road Accident - 1073
CM Helpline - 1076
Crime Satire - 1090
Women Helpline - 1091
Earthquake - 1092
Child Abuse Help - 1098
Farmer Call Center - 1551
Citizen Call Center - 155300
Blood Bank - 9480044444
Cyber Crime - 1930
Gas Complaind - 1906-
EB Complaind - 94987 94687
1912, 9445850811

Su	M	Tu	We	Th	Fr	Sa
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	அழகிய ஆரம்பம்... இன்று எ இதழ் June 2025				

இன்று எ இதழ் | இன்று எ இதழ் | 7094053241 Whatsapp | இன்று எ இதழ் | இன்று எ இதழ் | இன்று எ இதழ் | 7094053241 Whatsapp | இன்று எ இதழ் | இன்று எ இதழ்

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp



நிஜமா நீயா!?

கோவைக்கவி புவனா
கோயமுத்தூர்

மின்னல்கதை



இவரும்....

இவர்தான்..இனி உன் அப்பா. இவர் சொல்ப்படி கேட்டு நடக்கனும்....மகன் விக்னேஷைப் பார்த்து கூறிய தாயிடம் "நீ !எதற்கும் பார்த்து நடந்துக்கொள். அவரை போல.. இவரும் ஓடி விட போகிறார்" என்றான்.

திருச்சிற்றம்பலம்
சுரேஷ்



அன்பே..
ஆசையாக..
முத்தம்
தருவதாக இருந்தால்
உதட்டுக்கு
கோட்டிங் தராமல்
இருக்கும் நேரத்தில்
தந்து விடு...
என் மனைவியின்
கோபத்திலிருந்து
தப்பிக்க ஆசை

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241



சவம்

சசிகலா விஸ்வநாதன்

செத்தால் செயலற்ற உடல்
மனம் எனும் சுக்கான் மரித்தே போக;
செயல் திறன் மறந்து கிடக்கும்

அது
அவனல்ல
அது மனிதன் அல்ல
மனதறிந்த முக்குணங்களும் நீங்கின பின்னே
அது வெற்றுக் கூடு

மறப்பதற்கும்.
நினைப்பதற்கும்,
மறுப்பதற்கும்,
விரும்புவதற்கும்,
வெறுப்பதற்கும்
அதற்கு தகுதி இல்லை!

வழி அனுப்பினாலும்
அனுப்பாவிடினும்
அது
மண்ணின் வழிக்குப் போய் மறையும்.

ஆயினும்
உயிர் தாங்கி இருந்த கருவி!

நன்றும் தீதும் உயிரோடு இருந்த உடலுக்கு உண்டு
இது, இப்போது
அச்சம் தரும் நாகமோ
வீசு காற்றில் விழுந்த பழுதையோ அல்ல.

மண்ணிற்கு அதை நாமே அளிப்போம்
மனங் கொண்ட மரியாதையுடன்.



இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp



எளிய மருத்துவ குறிப்புகள்



தொகுப்பு
ஆ. ராதாகிருஷ்ணன்.
வாணியம்பாடி செல் 9442811258

முலாம் பழம் அடிக்கடி சாப்பிட சிறுநீர்க் கோளாறு நீங்கும். உணவுடன் போதுமான மோர், தயிர் சேர்த்தால் உடலுக்கு நல்லது. வேப்பிலை, வசம்பு, கஷாயம் குடிக்க பேதியை நிறுத்தும். மலச்சிக்கல் தீர முளைக்கீரை சாப்பிட்டு வர குணமாகும். முள்ளங்கி சாறு சாப்பிட ஜலதோஷம் இருமல் நின்றேங்கும், காலையில் தயிர் சாதம் சாப்பிட உடல் சூடு தணியும். மருதாணி வேர் பட்டையை அரைத்து கட்டினால் கால் ஆணி நீங்கும். சிவப்பு திராட்சை தோல் வியாதியை போக்கும். நெல்லிக்காயை நன்கு மென்று தின்று வர பற்கள் உறுதி ஆகம். பப்பாளி குடல் அலர்ஜி உள்ளவர்களுக்கு நல்ல பயன் தரும்.

சிரிப்புப் பட்டாசுகள்

சிரிப்புப் பட்டாசுகள்

சிரிப்புப் பட்டாசுகள்



முத்து ஆனந்த் வேலூர்

"உன் "லவ் மேட்டர்" என்னாச்சுடா?"
சரியானப் "பண்ணாடை"டா அவ, என் "கனவு"ல கூட வர மாட்டேங்கறா!"

"காதலைப் பத்தி நீ என்ன நினைக்கறே டியர்?!
"அதைப் பத்தி நினைச்சா நா ஏன்டா உன் கூட வர்றேன்?!"

டெய்லி "வாக்கிங்" போகணும் ரகு!"

பைக்லயா? கார்லயா? சிந்து!"
"உருப்பட்ட மாதிரி தான்! "

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்

அடுத்த இதழ்
வெளியாகும் நாள்
2025 ஜூன் - 25.
படைப்புகளை
21.06.2025-க்குள்
அனுப்பிவைக்கவும்.

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

மாற்றமே ஏற்றத்துக்கு வழி

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்
கைப்பேசி -9600886441.

துயரக் குட்டையில் நீ
மூழ்கி மூழ்கி குளிப்பதால்
உன் துன்பங்கள் தொலையவாப்
போகின்றன?

அதிர்ஷ்டத்தை நம்பி நீ
ஆண்டுகள் பல காத்திருந்தாலும்
உன் துரதிஷ்டம் உன்னை
விட்டு அகலவாப் போகிறது?

நல்ல நேரத்தை எதிர்ப்பார்த்து
நீ நிகழ்காலத்தைக் வீணேக் கழிப்பதால்
கெட்ட நேரம் என்பது
ஓடி ஒளியவாப் போகிறது?

அல்லவை எல்லாம் உன்னைவிட்டு
அகன்று நல்லவை மட்டுமே
உனக்கு நிகழ வேண்டும் என்று
மனிதா நீ நினைப்பதில்
தவறில்லை, முதலில் சிறப்பான
மாற்றங்களால் உன்னைச் செதுக்கு
பிறகு வரும்பார் ஏற்றங்கள்
உன்னைத் தொடர்ந்து.

ஜோக்



ஒருவர் : ”எனது நீதிமன்ற அனுபவங்கள்“னு தலைவர் புத்தகம் எழுதப்போறாராமே! அவர் சட்டம் படிச்சிருக்காரா, என்ன?”

மற்றொருவர் : ”நீ ஒண்ணு! பல்வேறு ஊழல் வழக்குகளுக்காக அவ்வப்போது கோர்ட்டுக்கு போயிட்டு வர்ற அனுபவங்களைத்தான் எழுதப் போறாராம்! ”

டீ. என். பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம்
கைபேசி: 9884808965

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

கட்டுரை :

"மறப்போம் மன்னிப்போம்"

பி.ஆர்.கிரிஜா, Phone: 98408 96329

மன்னித்து மறக்கும் மனோபாவத்தை நாம் அனைவருமே வளர்த்துக்கொண்டால் வாழ்க்கையில் அமைதியும் மன நிம்மதியும் கிட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை,

நான் 34 வருடங்களாக ஆசிரியர் பணியை செவ்வனே செய்து முடித்த ஆத்ம திருப்தி இருக்கிறது. எத்தனையோ மாணவ மாணவிகள் இன்றும் என்னை வீடு தேடி வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். ஆனாலும் சில மாணவ மாணவிகளுக்கு என்னைப் பிடிக்காமலும் போயிருக்கக்கூடும். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களிடம் கடுமையாக நடந்து கொண்டிருக்கலாம். அவர்கள் நன்கு ஒழுக்கமாக வளர வேண்டுமே என்ற ஆதங்கத்தில் அவ்வாறு கடுமையாக நடந்து கொண்டிருக்கலாம். அதை இப்போதும் மனதில் வைத்துக் கொண்டு அந்த ஆசிரியரை வெறுக்கும் மாணவர்கள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள் . ஒரு சிலர் அதை இப்போது நினைத்து வருத்தப்பட்டு அந்த ஆசிரியரை வந்து பார்க்கவும் செய்கிறார்கள். அப்படித்தான் ஒரு மாணவன் சமீபத்தில் எனக்கு மும்பையிலிருந்து ஃபோன் செய்தான். நான் அவனை எட்டாம் வகுப்பு படிக்கும் போதுதிட்டியதாகவும், அவன் அப்பாவிற்கு உடனே ஃபோன் செய்து வரவழைத்து புகார் தெரிவித்ததாகவும், அன்றிலிருந்து அவன் என்னை வெறுத்ததாகவும் அவனே தெரிவித்தான். மேலும் அவன் சொன்னது என்னை வியப்பில்ஆழ்த்தியது. "மேடம் நீங்கள் அன்று அவ்வாறு கூறியதால் தான் என் அப்பா என்னை விடாமல் கண்காணிக்க ஆரம்பித்தார். நானும் உங்களை வெறுத்தாலும் ஒரு வெறியுடன் நன்கு படித்து இப்போது ஒரு நல்ல வேலையில் இருக்கிறேன். இப்போது உங்களிடம் நான் மன்னிப்பு கேட்கிறேன் மேடம், உங்களை இத்தனை நாட்கள் வெறுத்ததற்கு என்னை தயவு செய்து மன்னியுங்கள், அடுத்த முறை சென்னை வரும்போது உங்களை வந்து கட்டாயம் சந்திக்கிறேன்". என்று சொல்லி முடித்தான். என் கண்கள் குளமாயின.

என் பள்ளிப்பருவத்திலும் இதே போன்ற ஒரு சம்பவம் நடந்தது. அதை நான் ஒரு முறை ஒரு இலக்கியக் கூட்டத்திலும் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். நான் பத்தாம் வகுப்பு படிக்கும்போது தினமும் மதியம் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு சென்று விட்டு வருவேன்.அன்றும் சாப்பாட்டு டைம் முடிந்து முதல் பீரியடில் நான் உள்ளே நுழைந்த அதே சமயம் என்னுடைய சமூக அறிவியல் ஆசிரியரும் எனக்கு முன்பே உள்ளே நுழைந்து விட்டார்.என்னைப் பார்த்து "இந்தியா வரைபடம் கொண்டு வந்தாயா ?" என்று கேட்டார். நான் இல்லை என்றேன். என்னை சுடு சொற்களால் நிந்தித்தார். வேடிக்கை என்னவென்றால் நானும் அதே சமூக அறிவியல் ஆசிரியராக இத்தனை வருடங்கள் பணிபுரிந்தேன். ஆசிரியரான உடனே மூன்றுவருடங்கள் கழித்து மதுரை சென்று நான் படித்த என் பள்ளியில் உள்ள அனைத்து ஆசிரியர்களிடமும் ஆசி வாங்கினேன். இந்த ஆசிரியர் அப்போது பணி ஓய்வு பெற்றிருந்தார். அவர் வீடு தேடி சென்று அவரிடம் ஆசி வாங்கி சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு சொல்லொணாத மன நிறைவு ஏற்பட்டது. எதையும் மனதில் பாரம் ஏற்றி வைத்தால் எப்போதும் அதிருப்தியும் மன வேதனையும்தான்மிஞ்சும். அதை மன்னித்து மறந்தால்மனதும்தூய்மையாகும்,பாரம் இறங்கி மனது லேசாகிவிடும். நல்ல நித்திரையும்கைகூடும். மொத்தத்தில் வாழ்க்கையில் அமைதியும் மனநிம்மதியும் ஏற்படும். ஆகவே வேண்டாதவற்றை மறப்போம், மன்னிப்போம். நல்லதை நினைப்போம், செய்வோம்.

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241



மோகம் முப்பது!!

குடந்தை பரிபூரணன்.
அலைபேசி : 6384538289.

மோகப் பயிர் வளர்த்து முத்தக் கனிபறித்தும்
தாகம் குறையாதத் தமிழ்க்கவிகாள் உங்கள்
மோகம் இருப்பதெல்லாம் முப்பது நாள்வரைதான்
வேகம் குறைப்பது விவேகம்!!

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

விளம்பர உலகில்...

- உங்கள் தாலுக்காவில் நீங்கள் ஒருவர் தான் விளம்பரதாரர்...

- உங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க...

- நல்ல விசயங்களை பகிர...

- உங்கள் Offer - களை உடனுக்குடன் தெரிவிக்க...

- தினசரி ஸ்டேட்டஸ்... மினி வீடியோ விளம்பரங்கள்

- 24 மணி நேரமும் செயல்படும் உங்கள் விளம்பரம்...

- சூப்பர் மார்க்கெட், நகைக்கடை ஜவுளிக்கடை நடத்துபவர்கள் மட்டும் **7094053241** என்ற எண்ணுக்கு உங்கள் விபரத்தை வாட்சப்பில் அனுப்பவும்

- சேர்ந்து கலக்குவோம்...

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

சிரிப்போ சிரிப்பு

சி. ஆர். ஹரிஹரன்,
ஆலவா, கேரளா.
M.No. 8330850998

1. தலைவர், ஏன் உன்னை கட்சியில
சேர்த்துக்க மாட்டேன்னு சொன்னார்?
இதுவரைக்கும் என் பேர்ல ஒரு
போலீஸ் கேஸ் கூட கிடையாதுன்னு
சொன்னேன்!

2. ஏன்யா, கூட்டத்தில நான்
பேசறதுக்கு மைக்செட்காரனை
ஏற்பாடு பண்ணியாச்சா?
மைதானத்துல தனியா இருக்க
பயமா இருக்கும்னு சொல்றான்
தலைவரே!

3. தூக்கத்துல மகளிரணித்தலைவி
பேரைச்சொல்லி உளர்றார்னு
தலைவரை ஹாஸ்பிடல்ல அட்மிட்
பண்ணினாங்களே, இப்ப எப்படி?

நர்ஸ் பேரைச் சொல்லி உளர்றாரு!

4. உங்க வீட்டுக்கு வந்த விருந்தாளிங்க
எப்படி ஒரே நாள்ல
திரும்பிப் போயிட்டாங்க மாலா?
இனி நீங்க போறவரை உப்புமா தான்
டிபன்னு சொன்னேன்!

5. உங்க பொண்ணு கல்யாணத்துக்கு
போட்டோ, வீடியோ ஒண்ணுக்கும்
ஏற்பாடு செய்ய வேண்டாம்!
ஏன் தரகரே?
கேமராவை பார்த்தா மாப்பிள்ளை
துண்டால முகத்தை மறைச்சுப்பார்!

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ பதிப்பு இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

ஜன்னலோர பேருந்து
பயணம்..
கைபேசியில் கண்கள்
மேயாத தருணம்
அவள் பெயர் தாங்கிய
எதோ ஒரு கடையின்
பெயர் பலகை
அவள் பற்றிய நினைவுகளை
மனம் முழுதும்
தாங்கி வருகிறது
வீட்டுக்கு சென்று
மனைவி குழந்தைகளை
பார்க்கும் வரை.



கயத்தை சத்யா,
கும்பகோணம்
செல்: 8220836122

ஜோக

”நேத்து உங்க வீட்டுக்கு வந்த திருடன் நேர்மையானவன்னு எப்படி சொல்ற?”

”அட்சயதிரிதியை அதுவுமா வீட்டுல இருந்த அவ்வளவு தங்க நகையும் இப்படி திருடிட்டு போறீயேன்னு கேட்டதும், என் ஒரு காதுல இருந்த கம்மலை கழட்டாமல் போயிட்டானே?”

ப.சோமசுந்தரம்
கோவிலம்பாக்கம்
போன்.8778414755

இனிய நண்பர்களே...
உங்கள் நண்பருக்கு
அழகிய ஆரம்பம் இன்று - ஈ
இதழை அனுப்பி இதழின்
வளர்ச்சிக்கு உதவுங்கள்...

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241


வ்கக்ப ஷாணர்ஙக





அமைப்பு

ரதி



சத்யா பிரியன்

காதல் டயலாக்

”ஏண்டி, உன் வீட்டுக்காரர் “மார்க்கெட்“டுக்கெல்லாம் போக மாட்டாரா?”

அவரு “காய்கறி“ வாங்கி வரச் சொன்னாக் “காதல்“ வாங்கி வர்றாருடி!”

கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை
வெளியிடுபவர், ஆசிரியர். வெ.கோபிநாத்

செல் 7094053241 indhrumail@gmail.com

இன்று இதழை படித்ததற்கு நெஞ்சார்ந்த நன்றி...



THANKS
Chat GPT
Meta AI &
All
Social Media

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp